ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2348/36 - 2023 සැප්තැම්බර් මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.09.07

*2348/36 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

**25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆ என்னும் பிரிவின்கீழான கட்டளை**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும் பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்டு* PV 66705 *என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான* "KIU *கம்பஸ் (பிறைவெட்) லிமிட்டெட்" தொடர்பில், சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2020 ஆம் ஆண்டின் பெப்புருவரி 27 ஆந் திகதிய 2164/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை* I *இனை, அட்டவணை* I *இன் நிபந்தனை* I *இனை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின்வரும் புதிய நிபந்தனையை இடுவதன்மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்:-*

*1.* KIU கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, கற்கைநெறி மற்றும் ஆராய்ச்சி ஆக்கக்கூறு (SLQF மட்டம் 10) மூலம் பூர்த்திசெய்யப்படும் முகாமைத்துவ மூலோபாயத்தில் வியாபார நிருவாக முதுமாணி தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்க்கும்போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்:-

*(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார நிருவாகம், பொதுநிருவாகம், வர்த்தகம், மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், கணக்கியல், நிதி, தோட்ட முகமைத்துவம் மற்றும் பெறுமதி மதிப்பீடு, வியாபார பொருளியல், தொழிற்பாட்டு முகாமைத்துவம், முகாமைத்துவ தகவல்முறைமை அல்லது பொருளியல் என்பவற்றில் 30 திறமைச் சித்திகளை உள்ளடக்கிய ஒரு இளமாணிப் பட்டம்; அல்லது*

1A - PG 6476 — 286 (2023/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஆ) வியாபார நிருவாகம், பொது நிருவாகம், வர்த்தகம், மனிதவள முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், கணக்கியல், நிதி, தோட்ட முகாமைத்துவம் மற்றும் பெறுமதி மதிப்பீடு, வியாபார பொருளியல், தொழிற்பாட்டு முகாமைத்துவம், முகாமைத்துவ தகவல் முறைமை அல்லது பொருளியல் என்பவற்றில் SLQF மட்டம் 6 அல்லது அதற்கு மேலான ஒரு தகைமை; அல்லது

(இ) SLQF மட்டம் 6 இற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு உயர்தொழில்சார் தகைமை; அல்லது

(ஈ) அந்த விசேடித்த துறையில் சேர்த்துக்கொள்வதற்காக குறித்துரைக்கப்பட்ட அதிகாரசபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான 0-4 அளவுத்திட்டத்தில் குறைந்தபட்சம் 3.0 GPA உடன் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) அங்கீகரிக்கப்பட்ட இயைபான துறையொன்றில் NVQ மட்டம் 7 இனைப் பூர்த்திசெய்திருத்தல்; அல்லது

(உ) இயைபான துறையில் இரண்டு ஆண்டுகளைக் கொண்ட பட்டத்துக்குப்பின்னரான தகைமைபெறும் அனுபவத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பாடத்துறையில் இளமாணிப் பட்டம்; அல்லது

(ஊ) இயைபான துறையில் இரண்டு ஆண்டுகளைக் கொண்ட பட்டத்துக்குப்பின்னரான தகைமைபெறும் அனுபவத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் பாடத்துறையில் ஓராண்டுக்குக் குறையாத ஒரு பட்டப்பின் திப்புளோமா அல்லது உயர் பட்டம்; அல்லது

(எ) இயைபான துறையில் இரண்டு ஆண்டுகளைச் கொண்ட பட்டத்துக்குப்பின்னரான தகைமைபெறும் அனுபவத்துடன் பின்வரும் உயர்தொழில்சார் தகைமைகளுள் ஒன்று:-

(i) ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியூட் ஒவ் மார்க்கெட்டிங் (SLIM) இனால் அளிக்கப்படும் சந்தைப்படுத்துதலில் திப்புளோமா; அல்லது;

(ii) இன்ஸ்டிடியூட் ஒவ் பேர்சனல் மனேஜ்மென்ட் (IPM) இலிருந்தான மனித வள முகாமைத்துவத்தில் உயர்தொழில்சார் தகைமை

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்

கொழும்பு,
*2023.09.05*

EOG *09-0059/1*

---

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

**25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆ என்னும் பிரிவின்கீழான கட்டளை**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட அக்குவைனஸ் கொலேஜ் ஒப் ஹயர் ஸ்டடிஸ் தொடர்பில், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2019, மாச்சு 26 ஆந் திகதிய 2116/11 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான I ஆம் அட்டவணையை அவ்வட்டவணையிலுள்ள நிபந்தனைகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்:-

**அட்டவணை I**

**நிபந்தனைகள்**

1. அக்குவைனஸ் கொலேஜ் ஒப் ஹயர் ஸ்டடிஸ் ஆனது (SLQF மட்டம் 6) ஆங்கிலத்தில் சிறப்பு கல்வி இளமானி பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது;

(அ) இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொத (உயர்தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) "சாதாரண சித்திகள்" (S) ("ஆங்கிலம்" பிரதான மூன்று பாடங்களில் ஒன்றாக இருத்தல் வேண்டும்) அல்லது அதற்குறச் சமமான தகைமையினை; அல்லது

(ஆ) க. பொத (உயர்தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே தடவையில் மூன்று (3) "சாதாசண சித்திகள்" (S) அல்லது க. பொத (சாதாரணதரப்) பரீட்சையில் ஆங்கிலத்திற்கு திறமைச் சித்தி (C) ஒன்றுடன் அதற்குச் சமமான தகைமை அல்லது அக்குவைனஸ் கொலேஜ் ஒப் ஹயர் ஸ்டடிஸ் இனால் வழங்கப்பட்ட ஆங்கில மொழி மற்றும் இலக்கியத்தில் திப்புளோமாவை அல்லது ஆங்கில ஆசிரியர் கல்வியில் திப்புளோமாவை வைத்திருக்கின்றவர் என்ற முறையில் அதற்குச் சமமான தகைமையினை;

குறைந்த பட்ச நுழைவுத் தகைமையாக அமைந்தொழுகுதல் வேண்டும்.

அக்குவைனஸ் கொலேஜ் ஒப் ஹயர் ஸ்டடிஸ் ஆனது குறித்தரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (5) வருட மீள் மீளாய்வுகமைய ஆங்கிலத்தில் சிறப்பு கல்வி இளமாணிப் பட்டத்தினை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்

கொழும்பு,
2023.09.05

EOG 09-0059/2